95—

புதிய மின்மாற்றி

32670—திரு. பி.கே. வைரமுத்து:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, நெடுங்குடி இராசாலயம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, நெடுங்குடி, இராசாலயம் கிராமத்தில் ஏற்கெனவே இருந்த 16 KVA / 22 KVA *மின்மாற்றி,* 100 KVA / 22 KVA *மின்மாற்றியாக மாற்றப்பட்டு, 17—10—2013 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது. தற்போது அங்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய முகம் கண்டு வாட்டம் போக்கும் வள்ளல் எங்கள் அம்மா, வயிறார சோறிட்டு வறுமை தீர்க்கும் வள்ளலாரே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) கனி என்று கை தொழுதால் கணை தொடுப்பில் கலி தீர்க்கும் காவியமே எங்கள் அம்மா, அரக்கர் கும்பலுக்கு, அசுரர் கூட்டத்திற்கு ஒருசேர முற்றுப்புள்ளி வைத்த ஒப்பில்லா வீரமே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மக்களின் விரல் எடுத்து எதிர்க்கட்சிகளின் முகங்களில் கரி பூசிய கம்பீரச் சிங்கமே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காக*

நாள், மக்களோடு நான் என்னும் மாதவத்தில் வாழ்கின்ற மனசாட்சியே எங்கள் அம்மா, கையேந்தி நிற்போருக்கு கை ரேகை தேயத் தேய அள்ளித் தரும் கனியே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சியோடு மோதிப் பார்க்க நினைப்போரை காலாவதியாக்கும் துணிவே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிலா திட்டங்கள் தந்து ஏற்றம் தந்த தாயே எங்கள் அம்மா, வாஞ்சையோடு என்னையும் வாழ்விக்கும் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதியில் நெடுங்குடி இராசாயம் கிராம மக்களின் கோரிக்கையினை ஏற்று, ஏற்கெனவே இருந்த 16 கே.வி.ஏ. மின்மாற்றியை 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றம் செய்து தந்த கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

97—

சொந்தக் கட்டடம்

***43808—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கொண்டையன் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?